1980 ஜூன் 28]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, மாவட்ட ஆட்சியாளர் நிலைமைகளைக் கூர்ந்து கவனித்துக் கொண்டு வருகிறார்கள். மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னதைப்போல ஏற்ற நடவடிக்கை எடுக்க முயற்சிகள் எடுக்கப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவரவர்களே, சிறு தீப்பெட்டித் தொழிற்சாலைகளுக்கு அளிக்கப்படும் குளோரேட்டுக்கான உரிமங்களை, அவர்கள் பயன்படுத்தாமல் பெரிய தீப்பெட்டித் தொழிற்சாலைகளுக்கு இலாபத்திற்கு விற்பனை செய்து விடுகிறார்கள். இதற்குக் காரணம் வட்ட ஆட்சியர் இந்தத் தவற்றைக் கண்டுபிடிக்க, கண்காணிக்க தணிக்கை செய்வது கிடையாது. எனவே, இதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் இதைப் பற்றி ஒரு புகார் எழுதிக் கொடுத்தால் அதை வைத்துக் கொண்டு ஏற்ற நடவடிக்கைகள் எடுக்க ஏதுவாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) சென்னை மகப்பேறு மருத்துவமனையில் குழந்தைகள் திருட்டுப் போவதைத் தடுப்பது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, டாக்டர் கே. சௌரிராஜன், திருவாளர்கள் நா. சுந்தரராஜ், என்.எஸ்.வி. சித்தன், ப. பொன்னுரங்கம், பொ. விஜயராகவன், உ. சுப்பிரமணியன் ஆகியோர் ஒரு அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். டாக்டர் கே. சௌரிராஜன்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, நானும் கொடுத்திருந்தேன், ஆனால் என் பெயர் சேர்க்கப்படவில்லை. அதற்கான காரணம் தெரியவில்லை. என் பெயரையும் சேர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தாமரைக்கனி அவர்களும் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் 54-வது விதியின் 6-வது உட்பிரிவின்படி இரண்டு கவன ஈர்ப்புகளும் ஒருவர் பெயராலேயே வரக்கூடாது என்பதால் ஒன்றிலே பெயர் போடப்பட்டிருக்கிறது, ஒன்றில் விடப்பட்டிருக்கிறது, அவ்வளவுதான்.

டாக்டர் கே. சௌரிராஜன் : தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :

''சென்னையில் அரசு மகப்பேறு மருத்துவமனைகளில் குழந்தைகள் திருடிச் செல்லப்படுவதால் அதனைத் தடுக்க எடுக்க வேண்டிய முயற்சிகள் குறித்து''.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவையில் வைக்கப் பட்டுள்ளது.

அறிக்கை.

மருத்துவக் கல்வி இயக்குநர், மற்றும் காவல்துறை ஆணையாளரிடம் இருந்து வந்துள்ள அறிக்கைகளின்படி சென்னை நகரில் குழந்தைகள் காணாமல்போன இரண்டு சம்பவங்கள் குறித்து இந்த அவையின்முன் தெரிவிக்க விரும்புகிறேன்.

14–6–80 அன்று மாடம்பாக்கத்தைச் சார்ந்த வேதநாயகம் என்பவரின் மனைவி தில்லைநாயகி, வீட்டிலேயே பெற்றெடுத்த பெண் குழந்தையுடன், குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சைக்காக எழும்பூர் அரசினர் மருத்துவ மனையில் எப்-2 வார்டில் சேர்க்கப்பட்டார். 15–6–80 மாலை 5 மணி அளவில் சுமார் 30 வயதுள்ள ஓர் கர்ப்பிணி அன்னியப் பெண் இத்தாயிடம் வந்து நட்பு முறையில் பழகினார். பின்னர் அத்தாய் தன் குழந்தையை அந்த அன்னியப் பெண்ணின் பாதுகாப்பில் விட்டு கழிப்பிடத்திற்கு சென்ற போது அந்த அன்னியப் பெண் குழந்தையை தூக்கிச் சென்று விட்டார். திரும்பி வந்த தாய், சுமார் 15 நிமிடம் காத்திருந்தும் தனது குழந்தை வரவில்லை என்ற நிலையில் அங்குள்ள செவிலியரிடம் அறிவித்தார். உடன் அங்கிருந்த மருத்துவ அலுவலரும், மற்றவர்களும் தேடிப்பார்த்து பயன் இல்லாது, பின்னர் காவல் துறைக்கு புகார் கொடுக்கப்பட்டது.

17–6–80 அன்று காலை 10 மணி அளவில் இந்திரா நகரைச் சேர்ந்த கோவிந்தராசன் என்பவரின் மனைவி திருமதி இளஞ்சியம் என்பவர் அரசு கஸ்தூரிபாய் காந்தி மகப்பேறு மருத்துவமனையில் பிரசவத்திற்காக சேர்க்கப்பட்டு அன்று மாலை 2–20 மணிக்கு ஆண் குழந்தையை பெற்றார். மாலை 4–20

1980 ஜூன் 28] [டாக்டர் திரு. எச்.வி. ஹண்டே]

மணிக்கு குழந்தையுடன் வார்டு எண் 25-க்கு மாற்றப்பட்டார். அன்று மாலை, சுமார் 25 வயது மதிக்கத்தக்க கர்ப்பிணி அன்னியப் பெண் ஒருவர் இத்தாயிடம் நட்புமுறையில் பழகினார். அந்த அன்னியப் பெண் தன் கணவரும், திரு. கோவிந்தராசனும் நண்பர்கள் என்று கூறி, தன் கணவர் குழந்தையைக் காண கீழே காத்துக் கொண்டிருப்பதாகத் தெரிவித்து, அத்தாயின் அனுமதியுடன் குழந்தையை பெற்று சென்றுள்ளார். சுமார் 15 நிமிடம் பொறுத்து இருந்தும் தன் குழந்தை திரும்பி வராத நிலையில் அத்தாய் மருத்துவமனை அதிகாரிகளிடம் புகார் கொடுத்தார். அதிகாரிகள் உடனடியாக சுற்றுப் புறமெங்கும் தேடியும் குழந்தை கிடைக்காததால் காவல்துறைக்கு புகார் செய்யப்பட்டது.

இந்த இரண்டு சம்பவங்களையும் இ.பி.கோ. 363 படி பதிவு செய்து புலன் விசாரணை செய்து தீவிர நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர். இந்த இரண்டு சம்பவங்களிலும் அன்னியப் பெண்கள் தாய்மார்களிடம் நட்பு முறையில் பழகி அவர்கள் அறியாமலேயே குழந்தைகளை எடுத்துச் செல்லும் ஒரே முறையை கையாண்டுள்ளனர். இரண்டு சம்பவங்களும், மருத்துவ மனையில் பார்வையாளர்கள் அனுமதிக்கப்படும் நேரத்திலேயே நடைபெற்றுள்ளன. தாய்மார்கள் தங்கள் சொந்த விருப்பத்தின் பேரிலேயே குழந்தைகளை அன்னியர் வசம் ஒப்படைத்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இனியும் இதுபோன்ற சம்பவங்கள் ஏற்படாவண்ணம் கவனித்துக்கொள்ள, மருத்துவ கல்வி இயக்குநர், பின்வரும் முறைகளை பின்பற்றும்படி மருத்துவமனை கண்காணிப்பாளர்களைச் கேட்டுக்கொண்டுள்ளார்.

1. " குழந்தை திருடர்கள் ஜாக்கிரதை " என்ற அறிவிப்புப் பலகை மருத்துவ மனைகளில் தாய்மார்களுக்கு தெரியும் வகையில் வைக்கப்பட வேண்டும். அன்னியர்கள் வார்டுக்குள் வருவதைத் தடுக்கும் வகையில் அறிவிப்புப் பலகை வைக்கப்பட வேண்டும்.

2. நோயாளிகள் தங்களது உறவினர் அல்லது நண்பர் என்று அடையாளம் காண்பித்தால் தவிர, மற்ற அன்னியர்களை வார்டுக்குள் அனுமதிக்கக்கூடாது.

3. குழந்தைகள் வெளியேறும் சமயம் தாய்மார்கள் உடன் இல்லாமல் இருந்தால், காவலாளிகள் குழந்தைகள் வெளியேற அனுமதிக்கக்கூடாது.

4. சந்தேகத்திற்கு இடம் அளிக்கும் நபர்களையும் வாகனங்களையும் குறித்து உடனடியாக அதிகாரிகள் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும்.

[முற்பகல் 9–20]

டாக்டர் கே. சௌரிராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இன்று காலைப் பத்திரிகையிலே கூட சென்னையில் ஒரு மருத்துவ மனையில் ஒரு குழந்தை காணாமல் போய் விட்டது என்ற விவரம் வெளியிடப்பட்டுள்ளது. இந்தக் குழந்தைகள் எல்லாம் காணாமல் போன நேரம் மதியமோ அல்லது காலையிலோ தவிர, பொது மருத்துவ மனைகளில் பார்வையாளருக்கு தனியாக ஒதுக்கப்பட்டிருக்கிற நேரத்தில் அல்ல. அந்த நேரம் மாலை 4 மணி முதல் 6 மணி வரை என்பது அமைச்சரவர்களுக்கும் தெரியும். அது 'விசிட்டர்ஸ டைம்'. ஆனால், குழந்தைகள் காணாமல் போனது 'விசிட்டர்ஸ் டைமில்' அல்ல. இங்கு கொடுக்கப்பட்டுள்ள அறிக்கையில், 'அன்னியப் பெண்கள்' தூக்கிச் சென்றதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். 'அன்னியப் பெண்கள்' என்று சொன்னால், விசிட்டர்சுக்குச் சம்பந்தம் இல்லாதவர்கள் என்றுதான் அர்த்தம். விசிட்டர்சுக்குச் சம்பந்தம் இல்லாதவர்கள் திறந்த வீட்டில் நாய்கள் நுழைவதைப் போல் அல்லது தர்மசத்திரத்தில் நுழைவதைப் போல் இன்று ஆஸ்பத்திரிகளில் போகிறார்கள் என்றுதான் அர்த்தம். ஆகவே, அதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென்றும், அதே நேரத்தில் மாண்புமிகு அமைச்சரவர்கள் கொடுத்திருக்கிற பதிலிலே நோயாளிகள் தங்களது உறவினர் அல்லது நண்பர் என்று அடையாளம் காண்பித்தால்தவிர மற்ற அன்னியர்களை வார்டுக்குள் அனுமதிக்கக் கூடாது என்று கூறியிருப்பது மிகவும் வேடிக்கையாகவும், விந்தையாகவும் இருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்கிறேன்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விளக்கங்களை நீங்களே கொடுத்துக் கொண்டிருந்தால் எப்படி? நீங்கள் கேட்பது கேள்வி வடிவிலே இருக்கவேண்டும்.

டாக்டர் கே. சௌரிராஜன்: அமைச்சர் அளித்த விளக்கத்தை நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை என்று சொல்லிக்கொள்கிறேன். அறுவை சிகிச்சை நோயாளிகள் எப்படி வெளியே வந்து பிற ஆட்களை அடையாளம் காட்ட முடியும்? அந்த நடவடிக்கை தவறானது. அந்த அறிவிப்பு முன்னுக்குப்பின்முரணானது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஆகவே, அந்த அறிவிப்பை எடுத்து விடுவார்களா என்று கேட்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விகளை இரண்டு பிரிவுகளாக நாம் எடுத்துக்

1980 ஜூன் 28] [டாக்டர் எச். வி. ஹண்டே]

கொள்ளலாம். முதலாவதாக, மாலை 4 மணியிலிருந்து 6 மணி வரைதான் நோயாளிகளைப் பார்ப்பதற்கு பார்வையாளர்கள் வருவதற்கு வாய்ப்பிருக்கிறது. தரப்பட வேண்டுமென்ற நிலையை மீண்டும் உருவாக்கி வருகிறோம். பல்லாண்டுகளாக, 4 மணி முதல் 6 மணி வரைதான் பார்வையாளர்கள் வரவேண்டுமென்றிருந்தாலும், பழக்கத்திலே காலையிலும் வருகிறார்கள், மாலையிலும் வருகிறார்கள். அந்தப் பழக்கத்தை படிப்படியாகக் கட்டுப்படுத்த, அந்த விசிட்டிங் நேரத்தை 4 மணியிலிருந்து 6 மணி வரை என்றிருப்பதை தீவிரமாக்க ஏற்பாடுகள் செய்கிறோம். அதைத்தான் என்னுடைய அறிக்கையிலே கொடுத்திருந்தேன்.

இரண்டாவதாக, நோயாளிகள் தங்களுடைய உறவினர்கள் யார், யார் என்பதை எப்படி வெளியே வந்து சொல்ல முடியும் என்று கேட்டார்கள். முதன்முதலில் வருகின்ற நேரத்திலேயே, நோயாளிகள் அதற்கு ஒரு அடையாளம் கொடுத்தார்களானால், உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், சீரியஸ் நோயாளிகளுக்கு அப்படிப்பட்ட அடையாளச் சீட்டுகள் கொடுக்கப்படுவது உண்டு. அதை இன்னும் சற்று விரிவுபடுத்தலாமா என்று 3 இடங்களிலே ஏற்பட்ட சூழ்நிலைகளின் காரணமாக, அந்த முயற்சியை எடுக்க அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. நா. சுந்தரராஜ்: தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற அறிக்கையிலே, "தாய்மார்கள் தங்கள் சொந்த விருப்பத்தின் பேரிலேயே குழந்தைகளை அன்னியர்களிடம் ஒப்படைத்தார்கள்" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. எந்தத் தாயும் தன்னுடைய குழந்தையை அன்னியர் வசம் ஒப்படைக்க விரும்பமாட்டார்கள். காரணம் தன் குழந்தையை தானே வைத்துக்கொள்ள வேண்டுமென்றுதான் நினைப்பார்கள். நேற்றைய தினம் கூட ஒரு சம்பவம் நடந்திருக்கிறது. இவற்றைத் தடுக்க அரசாங்கம் ஏதோ கட்டுப்பாடுகளைக் கொண்டுவரும் முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறது என்று சொன்னார்கள். நிச்சயமாக அந்தக் கட்டுப்பாடு மட்டும் அதைத் தடை செய்ய முடியாது. அரசாங்கம் தீவிரமான கண்காணிப்பு மூலமாகவும், தீவிர கட்டுப்பாடுகளின் மூலமாகவும்தான் அம்மாதிரி சம்பவங்களைத் தடுக்க முடியும். அதை விட்டுவிட்டு, ஏதோ சமாதானம் சொல்லியிருக்கிறார்கள். அவையிலே இருக்கிற உறுப்பினர்களைச் சமாதானப்படுத்தும் முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறார்களே தவிர, இச்சம்பவங்களைத் தடுக்க என்ன தீவிர முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதைத் தெளிவாக சொல்லுங்கள் என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, நோயாளிகள் தங்களுடைய விருப்பத்தின் அடிப் படையிலே குழந்தைகளைக் கொடுத்திருக்கிறார்கள், என்று முதலிலே என் பதிலில் சொல்லியிருக்கிறேன். விருப்பம் என்று சொல்லுகிற நேரத்தில் அவர்கள் பலாத்காரமாக கொடுக்கவில்லை என்றுதான் அர்த்தம். குழந்தையை கையிலே வைத்திருக்கிறார்கள். இரண்டு இடங்களில் முதலில் உமன் அன்டு சில்ரன் மருத்துவ மனை, அதற்குப் பிறகு கஸ்தூர்பா காந்தி மருத்துவ மனை ஆகிய இரண்டு மருத்துவமனைகளிலும் ஒரே மாதிரியாகத்தான் நடந்திருக்கிறது. நோயாளிகள் கையிலே குழந்தைகளை வைத்திருந்தார்கள். அந்தக் குழந்தையைக் கொடுங்கள் என்னுடைய கணவர் கீழே இருக்கிறார், காட்டிவிட்டு வருகிறேன் என்று வாங்கிக் கொண்டு போனார்கள். இதை எதற்காகச் சொல்லுகிறேன் என்றால் பலாத்காரமாகக் கொடுக்கப்படவில்லை என்பதற்காகத்தான், அந்த வார்த்தை போடப்பட்டிருக்கிறது. இன்னொரு கேள்வியையும் அவர்கள் கேட்டார்கள். இதற்கு என்ன தீவிர நடவடிக்கையை அரசு எடுத்திருக்கிறது என்று கேட்டார்கள். அங்கத்தினர் ஒன்றை யோசிக்க வேண்டும். தீவிர நடவடிக்கை எடுத்தால், பல்வேறு ஆயிரக்கணக்கான நோயாளிகளுக்கும், அவர்களின் சொந்தக்காரர்களுக்கும் மற்றவர்களுக்கும் துன்பங்கள் ஏற்படும். அதற்காக ஒரு 'பாலன்ஸ்டு' வியு என்ற வகையில் மற்றவர்களுக்குத் துன்பங்கள், தொல்லைகள் ஏற்படாதே அந்த அளவுக்கு, அதே நேரத்தில் எந்த அளவுக்கு அந்த குழந்தைகளுக்கு பாதுகாப்புத் தர முடியுமோ அந்த அளவுக்குத் தீவிரமாக யோசித்து நடவடிக்கை எடுக்கப் படும். அதைத்தான் 4 யோசனைகளாக அறிக்கையில் கொடுத்திருக்கிறேன். அதிலும் நேற்று நடைபெற்ற சம்பவத்தின் அடிப்படையில், தீவிரமான நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. பத்து மாதம் சுமந்து பெற்ற பச்சிளம் குழந்தையை ஒரு சில விநாடிகளில் பறி கொடுப்பது சொல்ல முடியாத சோகம் ஆகும். எனவே இந்த மாதிரி நிகழ்ச்சிகள் மீண்டும் நடைபெறாத அளவுக்கு, அங்கே பணியாற்றிய பணியாளர்கள் தங்கள் கடமையை மீறியவர்கள் என்ற முறையில் அவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? இனிமேலும் மருத்துவ மனைகளுக்கு வருகிற வெளியார்கள், நோயாளிகளைப் பார்க்க வருகிறவர்கள் போன்றவர்களைக் கண்காணிக்க தீவிர நடவடிக்கை எடுக்க என்ன திட்டம் போடப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன்?

1980 ஜூன் 28]

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, ஒன்றை மட்டும் உறுதியாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இதிலே பணியாளர்கள் யாரும் சம்பந்தப்படவில்லை என்பதை திட்டவட்டமாகச் சொல்லிக் கொள்கிறேன். பணியாளர்கள் யாரும் பக்கத்திலே இல்லை. அந்தக் குழந்தையை இன்னொரு தாயிடம் கொடுத்திருக்கிறார்கள். இந்த 3 சம்பவங்களும் ஒரே மாதிரியாக இருக்கின்றது. அன்னியர் வந்து கேட்ட போது குழந்தையைக் கொடுத்திருக்கிறார்கள். பணியாளர்கள் யாரும் குறுக்கே இல்லை. அவர்களுடைய துணையை நாடி அந்தக் குழந்தையைப் பெறவில்லை. எனவே, பணியாளர்கள் இதிலே சம்பந்தப்பட வில்லை.

திட்டவட்டமாக என்ன நடவடிக்கை எடுத்தோம் என்று கேட்டிருக்கிறார்கள். அதற்கு முன்பு நான் விடையளித்த நேரத்தில் 4 ஸ்டெப்கள் எடுத்திருப்பதை கோடிட்டுக் காட்டி இருக்கிறேன். இன்னும் மூன்று திட்டங்களை எடுத்துக் கொள்ள இருக்கிறோம். வெளியே சொன்னால் அவர்களுக்குத் தெரிந்து விடும். அது மாத்திரமல்ல, நேற்று நடைபெற்ற சம்பவத்தின் அடிப்படையில் மிகத் தீவிர திட்டங்களை எடுத்திருக்கிறார்கள். நேற்று பறி கொடுக்கப்பட்ட குழந்தையைக் கூட திரும்பவும் பெற்று விடலாம் என்று போலீசிலே இருந்து தகவல் வந்திருக்கிறது. எப்படி இருந்தாலும் அந்தக் குழந்தைகளை மீட்கும் வாய்ப்பு இருக்கிறது என்று சொல்லிக் கொள்கிறேன் எல்லாவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. 10 மாதங்கள் சுமந்து பெற்ற குழந்தையை பறிகொடுக்கும் அவல நிலை இனி வராது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர் கூறியதை நானும், அங்கத்தினர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுகிறோம். we share the feelings அரசு திட்டவட்டமான நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று நடைபெற்ற சம்பவங்கள் அத்தனையும் சென்னை நகரத்திலேயே நடைபெற்றிருக்கிறது. இந்தச் சம்பவங்களைப் பார்க்கிற போது மக்கள் மிகவும் பீதி அடைந்திருக்கிறார்கள். அச்ச நிலை ஏற்பட்டிருக்கிறது. பஸ்ஸிலே இருந்து கூட ஒரு பெண் கண்டக்டர் பையை பிடுங்கிக் கொண்டு ஓடி இருக்கிறாள். என் வீட்டுப் பக்கத்திலே இருக்கிற கர்ப்பிணிபெண், அரசாங்க மருத்துவமனைக்குப் போகவே அச்சப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். நடு ரோட்டிலே கொலை நடந்திருக்கிறது. பஸ்ஸிலே பையைப் பிடுங்கிக் கொண்டு...............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது குழந்தை காணாமல் போன சம்பவம் பற்றியது. பஸ்ஸில் நடந்த சம்பவத்திற்குப் போனால் நேரம் அதிகமாகும்.

[முற்பகல் 9-30]

திரு. வி. பென்னுரங்கம்: அடுத்து நான் கேட்க விரும்புவது, இரண்டு வாரத்தில் மூன்று குழந்தைகள் காணாமல் போய் இருக்கின்றன. போலீஸ் இலாகாவினர் என்ன செய்து கொண்டு இருக்கிறார்கள்? இதில் எந்த வகையில் நடவடிக்கைகளை போலீஸ் துறையில் மேற் கொண்டு இருக்கிறார்கள் என்பது தெரியாமல் மக்கள்அச்சத்தில் இருக்கிறார்கள் அவர்களுக்கு இத்தகைய அச்சம் ஏற்படுவதற்குக் காரணம், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கடந்த ஆண்டு ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். அதாவது, திருடனைப் பிடித்தாலும் போலீஸ் இலாகாவைத் திட்டுகிறார்கள் என்று சொன்னார்கள். அதனால் ஒரு வேளை போலீஸ் இலாகாவினர் அத்தகைய திருடர்களைப் பிடிக்காமல் இருக்கிறார்களோ என்ற அச்சம் வருகிறது. ஆகவே, மக்களைப் பாதுகாக்க போலீஸ் இலாகாவினர் என்ன நடவடிக்கை மேற் கொண்டு இருக்கிறார்கள் என்பதைக் குறிப்பாகத் தெரிவிக்க வேண்டுகிறேன் குறிப்பாக, குழந்தைகளுக்குப் பாதுகாப்புக் கொடுக்க என்ன நடவடிக்கை மேற்கொண்டு இருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன். அடுத்தபடியாக.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து நிறுத்திக் கொள்ளுங்கள்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னமாதிரி போலீஸ் துறை குற்றவாளிகளைப் பிடிக்க அஞ்சவில்லை. போலீஸ் துறையைப் பொறுத்த வரையில், உறுதியான நடவடிக்கையை எடுத்துக் கொண்டு வருகிறது. போலீஸ் துறை என்னென்ன நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு இருக்கிறது என்பதற்கு ஏற்கனவே பதில் சொல்லியிருக்கிறேன். 2 குழந்தைகள் காணாமல் போனதற்குக் காரணம் என்ன என்பதற்கான இன்வெஸ்டிகேஷன் நடந்து கொண்டு இருக்கிறது. துப்பறியும் இலாகாவும் தீவிரமான நடவடிக்கையை மேற் கொண்டு இருக்கிறது. 'இட் ஈஸ் எ கன்டினுயஸ் ப்ராசஸ்'. திட்டவட்டமான நடவடிக்கையில் அரசாங்கம் ஈடுபடுமா என்று கேட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குக் கூறிக் கொள்ள விரும்புகிறேன், நிச்சயமாக, உறுதியாக திட்டவட்டமான நடவடிக்கையை அரசு எடுத்துக் கொண்டு இருக்கிறது, நடவடிக்கை எடுக்கத் தயங்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1980 ஜூன் 28] [டாக்டர் எச். வி. ஹண்டே]

மற்றொரு கேள்வியைக் கேட்டார்கள், அது என் துறைக்குச் சம்பந்தம் இல்லாத கேள்வி, அந்தப் பிரச்னை சம்பந்தமாக நிச்சயமாக போலீஸ் துறையைப் பொறுத்த வரையில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மக்களுக்குத் தேவையான எல்லாப் பாதுகாப்புகளையும் தருவதற்கு எல்லா விதமான நடவடிக்கைகளையும் எடுத்துக் கொண்டு இருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் கே. சௌரிராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 3 இடங்களிலும் நடந்து இருக்கின்ற குழந்தைகள் காணாமல் போன நிகழ்ச்சி சாதாரணமாக ஏற்பட்டதா அல்லது ஏதோ ஒரு சதிக் கூட்டம் இதில் ஈடுபட்டு இருக்கிறதா என்று அறியவிரும்புகிறேன். பிள்ளைப் பிடிக்கும் கூட்டம் இதில் சம்பந்தப்பட்டு இருக்கிறது என்கிற தகவல் ஏதேனும் நம்முடைய அமைச்சருக்கு வந்து இருக்கிறதா? அவர்களைப் பிடிக்க தக்க முயற்சிகளை அரசு மேற்கொண்டு இருக்கிறதா என்று கேட்க விரும்புகிறேன். அடுத்ததாக, ஆஸ்பிடலுக்கு வருகின்ற நோயாளிகளை ஸ்கிரீன் செய்ய வேண்டும் (நோயாளிகளைப் பார்க்க வருகிற விசிட்டர்களை ஸ்கிரீன் செய்ய வேண்டும்) என்பதை செயல் படுத்துகிற நேரத்தில் ஒவ்வொருவருக்கும் அடையாளச் சீட்டு கொடுக்க வேண்டும், யாரையும் விசிட்டர் நேரம் தவிர மற்ற நேரங்களில் ஆஸ்பிடலில் அனுமதிக்கக் கூடாது என்று கடுமையான நடைமுறைகள் அனுஷ்டிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : இதில் சதிக் கும்பல் ஈடுபட்டு இருக்கிறதா என்று மாண்புமிகு உறுப்பினர் கேட்டார். அந்த வகையில் கூட 'டிடெக்ஷன்' போலீஸ் இலாகாவில் செய்து வருகிறார்கள். அதற்குரிய இன்வெஸ்டிகேஷன் நடந்து வருகிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்தபடியாக, நோயாளிகளை ஸ்கிரீன் செய்வது பற்றிச் சொன்னார்கள். (குறுக்கீடு) முதலில் அப்படித்தான் சொன்னீர்கள், அதற்குப் பிறகு தான் 'விசிட்டர்கள் ஸ்கிரீன் செய்ய வேண்டும்' என்று திருத்திச் சொன்னீர்கள். நான் மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன், வரக் கூடிய பார்வையாளர்களை ஸ்கிரீன் செய்து அடையாளச் சீட்டு கொடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். அவ்வளவு பேருக்கும் கொடுக்க முடியுமா என்று முதலில் நான் சொல்லிய போது வியப்பு தெரிவித்த அவர்கள், இப்போது என்னுடைய கருத்துக்கு அவருடைய கேள்வி மூலம் இசைவு தெரிவித்து இருப்பதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அந்த வகையில் நாங்கள் நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டு இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1980 ஜூன் 28

திரு. பொ. விஜயராகவன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, கழிப்பிடங்களுக்குத் தாய்மார்கள் செல்கிற போது குழந்தைகளை அந்நியர்களிடத்தில் கொடுத்து விட்டுச் செல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே, அப்படி அவர்கள் செல்கிற போது குழந்தைகளைக் கொடுத்து விட்டுச் செல்வதற்கு என்று ஆஸ்பிடல்களில் தனியாக செவிலியர்களை நியமிக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே அந்த முறை அமலில் இருக்கிறது. கழிப்பிடங்களுக்குச் செல்கிற நேரத்தில் குழந்தைகளைப் பாதுகாக்க செவிலியர்கள் இருக்கிறார்கள், இப்போது நடந்து இருக்கின்ற சம்பவம் எல்லாம், தன்னுடைய கணவனும், அந்தத் தாய்மாரின் கணவரும் நண்பர்கள், குழந்தையைக் காட்ட வேண்டும் என்று சொல்லி, ஏமாற்றி வாங்கிச் சென்று இருக்கிறார்கள். ஆகவே, இந்தப் பிரச்னை வேறு. மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற பிரச்னை இதில் எழவில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவரவர்களே, இதே மாதிரியான திருட்டுக்கள் மேலும் நடை பெறாமல் இருக்க, தகுந்த பாதுகாப்பிற்காக, 'வாச் அண்ட் வார்டு' அதிகாரிகளை அதிகமாக நியமிக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, அது ஒரு கொள்கைப் பிரச்னை. கேள்வி நேரத்தில் கொள்கைப் பிரச்சனைகளுக்கு பதில் அளிக்கக் கூடாது என்று விதி இருக்கிறது.

3. அறிவிப்பு.

வணிகப் பயிர்கள் வரி விதிப்பு (ரத்து) சட்ட முன்வடிவு, 1980.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு வணிகப் பயிர்கள் வரி விதிப்பு (ரத்து) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் இசைவு தெரிவித்துள்ளார்கள்.

4. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) வணிகப் பயிர்கள் வரி விதிப்பு (ரத்து) சட்ட முன்வடிவு, 1980.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டுவணிகப் பயிர்கள் வரி விதிப்பு (ரத்து) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.